# யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை
## Tamilischer Bildungsverein Deutschland

பொதுப் பரீட்சை - 2017 / 2018
தமிழ்மொழி

ஆண்டு: 7 நேரம்: 2.30
சுட்டெண்: .................................

பகுதி 1

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1) பின்வரும் சொற்களைக் கொண்டு வாக்கியங்களைப் பூரணப்படுத்துக.

அறிவு, பிரார்த்தனைக்கு, அறம், சாமர்த்தியம், தட்டச்சு.

அ) அந்தரே இளம் வயசிலேயே ....................................... காட்டித் தன் பெருமையை நிலை நாட்டியவன்.
ஆ) எண்ணத்தில் உதிப்பதை விரைந்து சென்று எழுத்தில் பொறிக்கும் திறமை ................................................ ஒன்றினாலேயே முடியும்.
இ) காந்தியடிகள் அதிகாலை நான்குமணிக்கு ................................................ எழுந்து விடுவார்.
ஈ) பெருஞ்சேரல் இரும்பொறை திரு உடையாரை விட ................................ உடையாரையே பெரிதும் மதித்து வந்தான்.
உ) மிகச்சிறிய அந்த ஊரில் நல்லவர்களுக்குள் ஒருவர் தன்னால் முடிந்த அளவுக்கு ....................................... செய்து வந்தார்.

2) பின்வரும் வாக்கியங்களுக்கு மிகப் பொருத்தமான சொற்களை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவு செய்க.

அ) ஆறு என்ற பாடலை எழுதியவர் (சுவாமி விபுலானந்தர், சுவாமி விவேகானந்தர், தேசிய விநாயகம்பிள்ளை, பாரதியார்)
ஆ) காந்தியடிகள் அறவழிப் போராட்டம் மூலம் (இலங்கையின், தென்னாபிரிக்காவின், இங்கிலாந்தின், இந்தியாவின்) சுதந்திரத்திற்கு வழிவகுத்தார்.
இ) (இலக்கியநூல், யாழ்நூல், நாடகநூல், இலக்கணநூல்) சுவாமி விபுலானந்தருக்குப் புகழ் சேர்த்துத் தந்துள்ளது.
ஈ) ஔவையாருடைய (காதில், மனதில், கண்ணில், உள்ளத்தில்) அந்த நல்லவருடைய புகழ் விழுந்தது.
உ) (இராமன், சேர்.ஐசாக்.நியூட்டன், சுவாமிகள், டாக்டர்.உவே. சாமிநாதய்யர்) தமிழ்த் தாய்க்கு செய்திருக்கும் தொண்டுகளைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது.

3) பின்வருவனவற்றுக்கு அடைப்புக் குறிக்குள் உள்ள சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

அ) நீ, நீங்கள், நீர், நீவிர் என்ற பெயர்கள் (தன்மை, முன்னிலை, பின்னிலை, படர்க்கை)ப் பெயர்களாகும்.
ஆ) உணவு மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் பிரதானமானது. இவ்வாக்கியத்தின் எழுவாய் (மனிதனின், உணவு, தேவைகளுள், பிரதானமானது)
இ) வானொலியில் இசைக்கச்சேரி நிகழ்ச்சியை கேட்டுக் கொண்டிருக்கிறோம். வானொலி என்பது (மூவிட, கூட்டு, மாற்று, தொழிற்)ப் பெயராகும்.
ஈ) ஒரு வாக்கியத்தில் தொடராக வரும் சொற்களைப் பிரித்துக் காட்டுவதற்குப் பயன்படும் குறியீடு (காற்புள்ளி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி, முழுப்புள்ளி) ஆகும்.
உ) வல்லின மெய்யெழுத்துக்கள் (ய் ர் ல் வ் ழ் ள், ங் ஞ் ண் ந் ம் ன், க் ச் ட் த் ப் ற், க் ங் ச் ஞ் ட் ண் த்)
ஊ) தமிழ் முதலெழுத்துக்கள் (12, 18, 30, 247)
எ) ஒருநாள் சிகாமணி வெளியூருக்குப் போய்க்கொண்டிருந்தான். இவ்வாக்கியம் காட்டும் காலம் (இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம், சுற்றுலாக்காலம்)
ஏ) திணை, பால், எண், இடம், காலம் என்பவற்றுள் பால் (இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து) வகைப்படும்.
ஐ) முகுந்தன் பாடசாலையில் கதிரையை உடைத்தான். இவ்வாக்கியம் இரண்டாம் வேற்றுமையில் (ஆக்கல், அழித்தல், அடைதல், உடையை) பொருளில் வந்துள்ளது.
ஒ) மாம்பழம் மிகவும் இனிமையானது. மாம்பழம் என்ற சொற்புணர்ச்சி (தோன்றல், திரிதல், கெடுதல், இயல்பு) விகாரப் புணர்ச்சியாகும்.

4) பின்வரும் சொற்களுக்கான ஒத்தகருத்துச் சொற்களை எழுதுக

அ) அழகு ……………………………………..
ஆ) வையகம் …………………………………….
இ) மனம் …………………………………….
ஈ) முகம் …………………………………….
உ) கண் ……………………………………..

5) பின்வரும் வாக்கியங்களுக்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொற்களை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவு செய்க

அ) இயற்கையின் அருமைபெருமை தெரியாமல் செயற்படுவதினால் பல அழிவுகளை உலகம் காண்கின்றது. அருமைபெருமை என்பது (இரட்டைமொழி, அரட்டைமொழி, இணைமொழி, துணைமொழி)
ஆ) Media என்ற ஆங்கிலச் சொல்லுக்குரிய தமிழ்க்கலைச் சொல் (இணையம், நினைவகம், ஊடகம், தகவல்)
இ) உலகச் சனத்தொகையின் (என்னிக்கை, எண்ணிக்கை, எண்னிக்கை, எண்நிக்கை) நாளாந்தம் கூடிக்கொண்டே போகின்றது.
ஈ) வேதம், மந்திரம், கறை, மற, ஒழித்தல் என்ற பல பொருளுக்குரிய ஒரு சொல் (ஆழி, அணி, மறை, பார்)
உ) பேரிரச்சலுடன் வீசிய காற்றினால் மரங்கள் (கசகச, குடுகுடு, மடமட, நெறுநெறு) என முறிந்து வீழ்ந்தன.

6) உமக்குத் தெரிந்த திருக்குறள் 5 அல்லது புதிய ஆத்திசூடி 10 எழுதுக.

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

..........................................................................................................................................

7) பின்வரும் சொற்களை இணைத்து வாக்கியங்கள் எழுதுக.

அ) வேலை ......................................................................................................................

..........................................................................................................................................

ஆ) ஆறு ..........................................................................................................................

..........................................................................................................................................

இ) விலங்கு ......................................................................................................................

..........................................................................................................................................

ஈ) உலகம் ......................................................................................................................

..........................................................................................................................................

உ) அறிவு ......................................................................................................................

..........................................................................................................................................

# யேர்மன் தமிழ்க் கல்விச் சேவை
## Tamilischer Bildungsverein Deutschland

பொதுப் பரீட்சை - 2017 / 2018
தமிழ்மொழி

ஆண்டு: 7

பகுதி 2

முதலாவது வினாவுக்கும் மேலும் ஒரு வினாவுக்குமாக இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

1) பின்வருவனவற்றுள் ஏதாவது ஒன்றைப் பற்றி 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை வரைக.

அ) தட்டச்சு
ஆ) பயிர் காப்போம்
இ) பெற்றோரைப் பேணுதல்
ஈ) கடமை
உ) கல்வி

2) மாணவர் ஒழுக்கம் பற்றி எழுதுக.

3) நீர் வசிக்கும் நாட்டின் காலநிலை மாற்றம் பற்றி உமது நண்பன் / நண்பிக்கு கடிதம் எழுதுக.

4) உமக்கு விருப்பமான நாடு எது? விரும்புவதற்கான காரணங்களை எழுதுக.